5 - SEP 1981

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1981 மார்ச் 25.

பங்குனி 11, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. இரங்கற் குறிப்பு.

மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. கே. கமலக்கண்ணன் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, திரு. கே. கமலக்கண்ணன், மேலவை முன்னாள் உறுப்பினர், சென்னையில் 24—3—1981 அன்று இயற்கையெய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கே. கமலக்கண்ணன் அவர்கள் 1960 முதல் 1966 வரை சென்னை-செங்கற்பட்டு-வட ஆற்காடு உள்ளாட்சித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு மேலவை உறுப்பினராக இருந்தார். 1958-59-ல் சென்னை நகர மேயராக இருந்தார். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்)

2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ரூபாய் 10,000 அளித்தல்

* 161 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) அரசு ஊழியர் பணியில் இருக்கும்பொழுது மரணமடைந்தால், அவருடைய குடும்பத்தினருக்கு ரூ. 10,000 வழங்கும் திட்டத்தின்படி, திட்ட ஆரம்பத்திலிருந்து 15—6—1980 வரை, எத்தனைக் குடும்பங்களுக்கு அந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது?